பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

"மரித்தேன், ஆனாலும்,
இதோ, சதா காலங்களிலும்
உயிரோடிருக்கிறேன், ஆமென்."

வெளி - 1:18

செய்தி மலர்
2024
மார்ச்

இதழ் : 11
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# நித்திய ஜீவனை அளிப்பார்

**நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே
என் ஊழியக்காரனும் இருப்பான்.**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

கடந்த பிப்ரவரி மாதம் முழுவதும் நம்மை கரம் பிடித்து நடத்தின கர்த்தர் வரும் மார்ச் மாதத்திலும் நம்மோடிருந்து லெந்து நாட்களை வெற்றிகரமாய் முடிக்க அருள் புரிவாராக.

இயேசு கூறினார் "ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனானால் என்னை பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" (யோவான்-12:26) ஆம் பிரியமானவர்களே கர்த்தருக்கு ஊழியம் செய்யும் பிள்ளைகளாகிய நம்மை குறித்து இயேசுவானவர் எவ்வளவு நம்பிக்கையோடு மேற்சொன்ன வார்த்தையை சொல்லியிருக்கிறார் பாருங்கள். அவர் இருக்கும் இடத்தில் நாமும் இருப்போம் என்று ஆண்டவர் நம்புகிறார், விரும்புகிறார். அவர் இருக்கும் இடங்கள் எவைகள்? நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை பற்றி கீழ் வரும் பகுதிகளில் பார்க்கலாம்.

## 1. நகரத்திற்கு புறம்பே...

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வசதியானவர்களும் செல்வந்தர்களும் வாழ்கிற எருசலேமிலே தங்கியிருக்க விரும்பாமல் குஷ்டரோகிகளும், பாவிகளும், தள்ளப்பட்டவர்களும், விரும்பப்படாதவர்களும், தீட்டுள்ளவர்களும்,ஈனர்களும் வாழ்கிற நகர வாசலுக்கு புறம்பே தன் சிலுவையை சுமந்து கொண்டு பாடு படும்படி போனார்.

இயேசு இந்த உலகத்தில் ஊழியம் செய்தபொழுது அவர்களுடைய சகோதரர்கள் இயேசுவை யூதேயாவுக்கு போய் அற்புதங்களை செய்து பிரபலமடையும்படி சொன்னார்கள். ஆனால் இயேசுவோ கலிலேயாவிலும் சமாரியாவிலுமே அதிகமாக ஊழியம் செய்தார் காரணம் அந்தப் பகுதிகளெல்லாம் மிகவும் இருளான பிற்படுத்தப்பட்ட பகுதிகள் (யோவா-7:1-5) ஏசாயா தீர்க்கதரிசி கூட "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. அந்த ஜாதியை திரளாக்கி அதற்கு மகிழ்ச்சியை பெருகப்பண்ணினீர். அறுப்பில் மகிழ்கிறது போலவும் கொள்ளையைப் பங்கிட்டு கொள்ளுகையில் களிகூறுகிறது போலவும் உமக்கு முன்பாக மகிழ்கிறார்கள் என்று (ஏசா-9:2,3)

அந்தப்படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தம் செய்யும்படியாக நகர வாசலுக்கு புறம்பே பாடுபட்டார். ஆகையால் நாம் அவருடைய நிந்தையை சுமந்து பாளையத்துக்கு புறம்பே அவரிடத்திற்கு புறப்பட்டு போகக்கடவோம். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடி தேடுகிறோம் (எபி-13:12-14) ஆம் பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்வு என்பது சுகபோகமாய் வாழுகிற வாழ்க்கையல்ல அது பிறருக்காக வாழ வேண்டிய உன்னத வாழ்க்கை. அதனால்தான் இயேசு தான் விரும்பி ஏற்றுக்கொண்ட புறம்பான நகர வாழ்க்கையில் தன் ஊழியக்காரனும் வாழ்வான் என்று எதிர்பார்க்கிறார். ஆகவே இந்த லெந்து நாட்களிலே மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கையை நாம் தெரிந்துகொள்வோமாக.

பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தை பகிர்ந்து கொடுக்கிறதற்கும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டில் சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறது அல்லவோ? எனக்கு உகந்த உபவாசம். இப்படி செய்கிறவர்களுடைய ஜெபம் உடனடியாக கேட்கப்படும். இருளிலே வெளிச்சம் உதிக்கும். அந்தகாரம் மத்தியானத்தைப் போல ஆகும். வறட்சியான காலங்களில் உன் ஆத்துமா திருப்தியாகும். உன் எலும்புகள் நிணமுள்ளதாகும். உன் வாழ்க்கை நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீருற்றைப் போலவும் இருக்கும். (ஏசா-58:6-11)

## 2.சிலுவையிலே ...

இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஒருவன் என்னை பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின் பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என் நிமித்தமாக தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தி கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக்கொடுப்பான். (மத்-16:24-26)

தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்கு பாத்திரனல்லன் தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான். (மத்-10:38,39)

ஒருமுறை இயேசு மறுரூப மலையில் மோசேவோடும், எலியாவோடும் தான் அடையப் போகிற சிலுவை பாடுகளைக் குறித்து சம்பாஷித்துக்கொண்டிருந்தார். அதற்குப் பிறகு தம் சீஷர்களைப் பார்த்து தாம் எருசலேமுக்கு போய் மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேத பாரகராலும் பல பாடுகள் பட்டு கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டுமென்பதை சொல்லத் தொடங்கினார். அப்பொழுது பேதுரு அவரை தனியே அழைத்துக்கொண்டு போய் ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே இது உமக்கு சம்பவிப்பது இல்லையென்று அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

அவரோ பேதுருவை திரும்பிப்பார்த்து எனக்கு பின்னால போ சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய். தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய் என்றார். (மத்-16:21-23)

ஆம் பிரியமானவர்களே, நீங்களும் நானும் கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறைய ஒப்புக்கொடுக்க வேண்டும். நம்முடைய சுயநலம், பாவங்கள், தற்பெருமை,வீம்பு, பொறாமைகள்,தர்க்கங்கள், வைராக்கியங்கள், பகைமை, துர்செயல்,கொடுமையான வார்த்தைகள் யாவையும் சிலுவையில் அறையப்பட வேண்டும். மாறாக பரிசுத்தம், மகிமை, ஒளி, கிருபைகள், நற்செயல்கள், ஏழைகளுக்கு இரங்குதல், தானதர்மங்கள் இவைகளை செய்வதன் மூலம் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுகிற அனுபவத்தையும் நிச்சயம் நாம் பெறுவோம்.

கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மை தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மைப் பாராட்டாதிருப்பேனாக. அவரால் உலகம் எனக்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறது. நானும் உலகத்திற்கு சிலுவையில் அறையுண்டிருக்கிறேன். (கலா-2:20, 6,14)

## 3. பரலோக ராஜ்ஜியத்தில்...

கர்த்தர் நமக்கு பாடுகள் மரணத்தோடு கூட நித்திய ஜீவனையும் கட்டளையிட்டிருக்கிறார். அதனால்தான் "இயேசு சொன்னார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு.

அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நானிருக்கும் இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன். நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யேவா-14:1-6) ஆம் பிரியமானவர்களே, நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம். (1-யோவா-2:25)

இதோ வாசற்படியிலே நின்று கதவை தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தை கேட்டு கதவை திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். நான் ஜெயம் கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது பேல ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ? அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன். (வெளி-3:20,21)

ஆண்டவருக்கு பயந்து அவருடைய கற்பனைகளுக்க கீழ்ப்படிந்து அவருடைய அன்பை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தி சாட்சியின் வாழ்க்கையை வாழ்ந்து கடவுளுக்காக பாடுபடுகிறவர்களுக்கு கர்த்தர் நித்திய நித்திய காலமாய் ஆளுகையைத் தந்து ஆசீர்வதிக்கிறார். உமக்காக வாழ்ந்து கஷ்டப்பட்டேனே எனக்கு என்ன கிடைக்கும் என்று கேட்ட பேதுருவைப் பார்த்து, இயேசு "மறுஜென்மக்காலத்திலே மனுஷக்குமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது என்னை பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாம் தீர்க்கிரவர்களாக பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். என் நாமத்தின் நிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாயவது விட்டவன் எவனோ? அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான். (மத்-19:27-29)

அன்பானவர்களே, இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டிருந்த யோவானைப் போல இயேசு இருக்கிற இடத்திலே நாமும் தங்கியிருக்க பிரயாசப்படுவோம். நகர வாசலுக்கு புறம்பே, சிலுவையிலே, பரலோகராஜ்ஜியத்திலே ஆண்டவரோடு கூட தங்கியிருப்போம். கர்த்தர் நம்மை அளவில்லாமல் ஆசீர்வதிப்பார்.

கர்த்தருடைய கிருபை உங்களோடு இருப்பதாக,

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

# தேவனின் ஆலயம் கட்டப்பட நாம் செய்ய வேண்டிய காரியங்கள்

எபேசி-2:21 அவர் மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. என்று வாசிக்கிறோம்.

1.மோசே ஆசரிப்புக்கூடாரம் கட்ட 1 டன் பொன்
4 டன் வெள்ளி சேர்த்து வைத்தார்.
2.தாவீது தேவனுக்கு ஆலயம் கட்ட 1 லட்சம் தாலந்து பொன்
34,500 டன் வெள்ளி சேகரித்து வைத்தான்.

இருப்பினும் தாவீது ஆலயத்தைக் கட்ட தேவன் அனுமதிக்கவில்லை. மாறாக சாலமோன் தேவாலயத்தைக் கட்டினான். நாமும் தேவாலயத்தைக் கட்டவேண்டும் என்று சொன்னால் செய்ய வேண்டிய காரியங்கள்.

## 1.முதல் ஆலோசனை- மீன் பிடிக்கின்ற அனுபவம்

இயேசு சீஷர்களை முதலாவது அழைத்தார். மத்-4:19- என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரை பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். ஆனால் சீஷர்கள் முதலாவது அழைப்பை மறந்தவர்களாக இரண்டாவது அழைப்புக்கு காத்திருக்கிறவர்களாக மாறிவிட்டார்கள். சபை முதலாவது அழைப்பில் உறுதியாக நிற்க வேண்டும். கர்த்தர் அநேகரை திரும்ப திரும்ப அழைப்பது இல்லை. நம்மோடு இரட்சிக்கப்பட்டவர்கள் அநேகர் கிறிஸ்துவுக்குள்ளாக இல்லை. இந்த சீஷர்களை முதலாவது தேவன் அழைத்தார். இயேசுவோடு இருந்தார்கள் அநேக அற்புத அடையாளங்களை கண்டார்கள். இயேசு பாடுபட்டு மரித்தார். மரித்தவர் உயிர்த்தார். இப்பொழுத அவர்கள் இரண்டாவது அழைப்புக்கு காத்திருக்கிறவர்களாக மாறிவிட்டார்கள். அதைத்தான் யோவா-21:5-ல் மீன் பிடிக்கின்ற சீஷர்களை நோக்கி பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா? என்று நாம் வாசிக்கிறோம்.

முதலாவது அழைப்புக்கு நீங்களும் நானும் கீழ்ப்படியாவிட்டால் அவர் கிருபை நம்மை தூக்கி எரிந்து விடாது ஆனால் நம்மைக்கொண்டு தேவன் செய்ய நினைத்த காரியத்தை மாற்றிக்கொள்வார். நாம் பயன்பட்டால் நமக்கு சந்தோஷம். நான் பயன்படாமல் போனால் கர்த்தர் என்னை தள்ளிவிட்டு என்னைக்கொண்டு செய்ய நினைத்த காரியத்தை வேறொருவரை கொண்டு சிறப்பாக செய்துவிடுவார். இஸ்ரவேல் மக்களுக்கு கர்த்தர் சொன்னார் நீங்கள் என்னுடைய ராஜரீக ஆசாரியக்கூட்டம் என்று. அவர் அவருக்கு சொந்தமானதிலே வந்தார். அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளாதபோது கர்த்தர் சபையை ஏற்படுத்தினார். நம்மை ஆசாரியக் கூட்டமாக மாற்றினார் என்று 1-பேது-2:19-ல் வாசிக்கிறோம்.

யோனா நினிவேவுக்கு போகாமல் தர்ஷீக்கு போக புறப்பட்டான். பிற்பாடு தேவன் சந்தித்து திரும்பவும் நினிவேவுக்கு அனுப்பினார். பிற்பாடு தேவன் யோனாவுக்கு சொல்லுகிறார்.

யோனா-3:2-ல் நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்கு போய் நான் உனக்கு கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய் பிரசங்கி என்றார். முதலாவது அழைப்பை யோனா தவிர்த்தபடியினால் கீழ்படிய மறுத்தபடியினாலே தேவன் அவனுடைய பேசுகின்ற சுதந்தரத்தை மட்டுப்படுத்தினார். முதலிலே யோனா போயிருந்தால் யோனா என்ன சொல்லியிருந்தாலும் கர்த்தர் ஆமென் என்று சொல்லியிருப்பார். அவன் மறுத்த படியினாலே கர்த்தர் பிற்பாடு அவர் என்ன சொல்லுகிறாரோ அதை சொல்லும்படி சொன்னார்.

முதலாவது மீன் பிடிக்கின்ற அனுபவம் நாம் செய்ய வேண்டியது கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிய வேண்டும்.

## 2. இரண்டாவது ஆலோசனை- மேய்ப்பனாதல்

யோவா-21:15-18 அவர்கள் போஜன பண்ணின பின்பு இயேசு சீமோன் பேதுருவை நோக்கி யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் நீ அதிகமாய் என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா? என்றார்.
அப்படி என்றால் கர்த்தர் எதிர்பார்த்தது முதல் தர அன்பு இவர்களிலும் என்றால் எல்லாரிடத்தில் காட்டும் அன்பை விட என்னிடத்தில் அன்பாய் இருக்கிறாயா? என்று அர்த்தம். ஏனென்றால் தேவன் நமக்கு தந்தது முதல் தர அன்பு யோவா-3:16 தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை நித்திய ஜுவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். என்று வாசிக்கிறோம்.
நாம் உண்மையாகவே தேவனிடத்தில் அன்பாய் இருக்கிறோமா? யோவா -14:21 என் கற்பனைகளை பெற்றுக்கொண்டு அவைகளை கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாய் இருக்கிறான் என்றார். இது இரண்டாம் தரம் அன்பு.
யோவா-14:23 ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் வார்த்தையை கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாயிருப்பார் நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். என்றார் இது தான் முதல் தர அன்பு.

**கற்பனை** என்பதற்கு கிரேக்கத்தில் **என்டோலா** அதாவது- You Must Obey The Order Otherwise You Will Be Punished. என்று அர்த்தம்.
**வார்த்தை** என்பதற்கு கிரேக்கத்தில் **லோகோஸ்** அதாவது Written Word இதற்கு Expresstion Of Thought என்ற இன்னொரு அர்த்தமும் உண்டு.

தேவன் நமக்கு சொல்ல நினைத்தது அநேகம். ஆனால் எழுதிக்கொடுத்தது கொஞ்சம்தான். இன்னும் அநேக வார்த்தைகள் அவர் உள்ளத்தில் இருக்கிறது. உபா-29:29 மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குரியவைகள். வெளிப்படுத்தபட்டவைகளோ இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தையின் படியெல்லாம் செய்யும்படிக்கு நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள் என்று வாசிக்கிறோம்.

மத்-16:17- ல் இயேசு அவனை நோக்கி யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா உனக்கு இதை வெளிப்படுத்தினார் என்றார். கர்த்தரின் உள்ளத்தில் உள்ள காரியங்களை அறிந்துகொள்ள வேண்டும். அவர் என்ன சொல்ல நினைக்கிறார் என்பதை அதை அறிய முற்பட வேண்டும். ரோம-12:2 நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்று வேதம் கூறுகிறது. கர்த்தர் உங்கள் சிந்தையை மறுரூபமாக்கும்போது அவர் என்ன சொல்ல நினைக்கிறாரோ அதை நமக்கு வெளிப்படுத்துவார்.

இரண்டாவது அன்பாயிருக்க வேண்டும் தேவனின் உள்ளத்தில் உள்ள காரியங்களை அறிந்து கொள்ள முற்பட வேண்டும்.

### 3.மூன்றாவது ஆலோசனை- சீஷனாவது

லூக்-6:40 - சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான் என்று வாசிக்கிறோம்.

சீஷன் என்பதற்கு கிரேக்கத்தில்- மேதற்டஸ் - Follower பின்பற்றுகிறவன் என்பது அர்த்தம். 1 தெசலோ 1:6 நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே திருவசனத்தை ஏற்றுக்கொண்டு எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுவர்களாகி என்று வாசிக்கிறோம். முதலாவது ஊழியக்காரர்களையும் பின்பு கர்த்தரையும் பின்பற்ற வேண்டும்.

கர்த்தர் சொல்கிறார் யோசுவா-1:7 என் தாசனாகிய மோசே உனக்கு கற்பித்த நியாயப்பிரமாணத்தின் படியெல்லாம் செய்ய கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு நீ போகுமிடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொண்டு அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக என்றார்.

மோசே கானான் தேசத்துக்கு போகவில்லை அவரை பின்பற்றின யோசுவா கானான் தேசத்துக்கு பிரவேசித்தான். நாம் செய்ய வேண்டியது யோவா-21:22-ல் இயேசு அதற்கு நான் வருமளவும் இவன் இருக்க எனக்கு சித்தமானானல் உனக்கென்ன நீ என்னை பின் பற்றி வா என்றார்.

மூன்றாவது சீஷனாகுதல் கர்த்தரை பின்பற்றுகிறவனாகி பிறருக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

அன்பானவர்களே, நாமும் தேவனின் ஆலயத்தை கட்டவேண்டும் என்றால் சபையை கட்டி எழுப்ப வேண்டுமென்றால் கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்து, தேவனின் உள்ளத்தில் உள்ள காரியங்களை அறிந்து, கர்த்தரை பின்பற்றுகிறவனாகி பிறருக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

கர்த்தர் நம்மை அவருடைய சித்தத்தின்படி நடத்துவாராக.

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்,
ஆண்டனி.

## கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியும் தாவீதும்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

"பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும் படி வேண்டுகிறேன்" (3-யோவா-1:2) என்ற வார்த்தையின்படி நம் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

1-நாளா-17:1 தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறபோது அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி பாரும் நான் கேதுரு மர வீட்டிலே வாசம் பண்ணுகிறேன். கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியோ திரைகளின் கீழ் இருக்கிறது என்றான்.

தாவீது வீட்டில் வாசம் பண்ணுகையில் தன்னுடைய இருதயத்தில் கர்த்தரையும் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியையும் எண்ணிக்கொண்டு இருக்கிறான் (2-நாளா-7:7) ஆடுகளின் பின்னே நடந்தவனை ராஜாவாக்கின தேவனையும் அவர் உடன்படிக்கை பெட்டியையும் அரியணையில் அமர்ந்தவுடன் தாவீது மறந்து போகவில்லை. நான் கேதுரு மர வீட்டிலும் என்னை ஆசீர்வதித்த தேவனுடைய பெட்டி திரையின் கீழிலும் இருக்கிறது என்ன? என்று இருதயத்தில் நினைத்து, தேவன் வாசம் பண்ண ஒரு ஆலயத்தை கட்ட வேண்டும் என்று தன்னுடைய இருதய வாஞ்சையை, ஏக்கத்தை நாத்தான் தீர்க்கதரிசியிடம் சொல்லுகிறான்.

தேவனுடைய வார்த்தையின் மேல் உண்டான வாஞ்சை, அவருடைய சமூகத்தின் உள்ள ஏக்கத்தை அறிந்த தேவன், தாவீதை ஆசீர்வதித்த விதம் எண்ணிலடங்காதது.

### 1.போன இடமெல்லாம் ஆசீர்வாதம்

1-நாளா-17:8 நீ போன இடமெல்லாம் உன்னோடே இருந்து உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்குவேன் என்ற ஆசீர்வாதத்தை கொடுக்கிறார். நம்முடைய இருதயத்திலும் தேவனை குறித்தான வாஞ்சை இருக்கும் போது நாம் போகும் இடமெல்லாம் நம் தேவன் நம்மோடே கூட இருப்பார். நாம் எதற்கும் அஞ்ச வேண்டிய தேவையில்லை.

### 2. ராஜ்ஜியத்தையும் சிங்காசனத்தையும் நிலைப்படுத்துவேன்

1-நாளா-17:11 நீ உன் பிதாக்களிடத்திலே போக உன் நாட்கள் நிறைவேறும் போது, நான் உனக்கு பின்பு உன் சந்ததியை எழும்பப்பண்ணுவேன் என்று தாவீதினிடத்தில் கூறுகிறார். நம்முடைய வழிகள் பிரியமாயிருந்தால் தேவன் நமது பிள்ளைகளுக்கு நிலையான ராஜ்ஜியத்தை கொடுத்து ஆசீர்வதிப்பார்.

...... தொடர்ச்சி 14-ம் பக்கத்தில் ..

" உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் "
( ஆதி -12:2 )

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. கிருபா கலிய மூர்த்தி
செல்வன். ஷெரிடன் சைமன் பால்ராஜ்
சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. அனிதா திவ்யராஜ்
சகோதரி. சாரா சவிதா சந்தோஷ்
செல்வன். ஜேடன் பால் கிரன்குமார்
சகோ. ஜெயக்குமார்
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
சகோதரி. அனுஷா ஜெய்சன்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
செல்வன். டியோன் பென்சாம்
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜென்சார்
ஜோவல் சிங்
சகோ. சாமுவேல்.E

செல்வன். ஜான்ராஜ் ராஜவேல்
செல்வி. நிகிட்டா அருண் இம்மானுவேல்
சகோ. வினிஷ்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வ சிங்
சகோ. ஜான் போஸ்கோ
செல்வன். அட்ரியல் கேமுவேல் தாஸ்
செல்வன். யானிங் அருண்
சகோ. ஏசுரெத்தினம்
செல்வி. ஸ்டெஃபானா சதீஸ்குமார்
செல்வி. ஜெஸ்வின் ஆரோக்கியதாஸ்
செல்வி. அபியா செல்வி தர்மர்
சகோதரி. எழில் டேனியல்ராஜ்
சகோ. பால் டேனியேல்
சகோதரி. ஜெமீலா ஜோய்ஸ்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
சகோதரி . ஷீபா ஜிவல்சிங்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி / திரு . ஆசீர்வாதம்
திருமதி / திரு . சைமன் ஜெயகுமார்
திருமதி / திரு . சுகுமாரன்

# 2024 – மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/3/2024 | சகோ. சாம் சுந்தர் | சகோ.ஸ்டாலின் |
| 10/3/2024 | சகோ. ஆரோக்கியதாஸ் | சகோ.கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 17/3/2024 | சகோ. சுபின் | சகோ.பிரசாத் |
| 24/3/2024 | பாஸ்டர். ரவிச்சந்திரன் ( குருத்தோலை ஞாயிறு ஆராதனை ) | |
| 31/3/2024 | உயிர்த்தெழுதல் (ஈஸ்டர்) ஆராதனை (திருவிருந்து ஆராதனை) | |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/3/2024 | சகோ. வேலு ராமர் | சகோ.ஸ்டாலின் |
| 8/3/2024 | சகோ. ரவிஜான் பீட்டர் | சகோ.பிராங்ளின் |
| 15/3/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/3/2024 | பாஸ்டர். ரவிச்சந்திரன் ( சீயோன் மிசன் சர்ச் தஞ்சாவூர் ) | |
| 29/3/2024 | புனித வெள்ளி ஆராதனை | |

## ஆராதனை ஒழுங்குகள்

**9/3/2024 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:30 மணிவரை
வேத வினா பகுதி – 1I கொரிந்தியர்

**14/3/2024 அன்று முழு இரவு ஜெப ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**28/3/2024 அன்று வியாகுலவியாழன் ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

**29/3/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் - மாலை 6:30 முதல் இரவு 8:30 மணிவரை
வேத வினா பகுதி - நீதிமொழிகள்

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 5:00 முதல் 6:00 வரை

**செவ்வாய்கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2024 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. யார் ஜெபம் பண்ணும் போது கர்த்தருடைய மகிமை தேவாலயத்தை நிரப்பிற்று?
2. யாருடைய கண் பூமியெங்கும் உலாவி கொண்டிருக்கிறது?
3. மரித்தபின் கனம் பண்ணபட்டவன் யார்?
4. மரிக்கிறதற்கு முன்னே தனக்கு சொந்த கல்லறை உண்டாக்கி வைத்த ராஜா யார்?
5. மகா வீரனான லட்சத்திருபதனாயிரம் பேரை ஒரே நாளில் கொன்று போட்டவன் யார்?
6. மரித்தபின் தன் வீட்டிலே அடக்கம்பட்டபட்ட ராஜா யார்?
7. கர்த்தடைய ஆலயத்தில் தூப பீடத்தின் முன் வைத்து நெற்றியில் குஷ்ரோகம் பிடித்த ராஜா யார்?
8. வெங்கல பிரசங்க பீடம் செய்த ராஜா யார்?
9. பொன்தகட்டால் உண்டாக்கின கேடகங்களை ராஜா எந்த மாளிகையில் வைத்தான்?
10. தன் மனம் துன்மார்க்கமாய் நடக்க அவனுக்கு ஆலோசனைகாரியாய் இருந்த தாய் யார்?
11. லட்சம் பராக்கிரமசாலிகளை 100 தாளந்து வெள்ளி கொடுத்து கூலிக்கு அமர்த்தினவன் யார்?
12. முன்னூறு ரதங்கள் உடையவன் யார் ?
13. எரிசலேமில் கோபுரங்களை கட்டினவன் யார்
14. தேவன் அவனை கைவிட்டார் அவன் யார்?
15. எங்கள் தேவனே அவர்களை நீர் நியாயம் தீர்க்கமாட்டீரோ என்று வேண்டிக் கொணடவர் யார் ?

விடைகளை வருகின்ற 20-03-2024 க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் –
"2.நாளாகமம் "
அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7**

# 2024 - பிப்ரவரி மாத வேத வினாவுக்கு விடை

1. மரச்சாமான் ( லேவி 15:12)
2. ஏழுநாள் ( லேவி 15:13)
3. ஒரு ஆட்டுகடா ( லேவி 16:5)
4. பரிசுத்த ஸ்தலம், ஆசாரிப்பு கூடாரம், பலிபீடம்( லேவி 16:20)
5. கர்த்தருடைய சன்னிதியில் ( லேவி 17:5)
6. அவள் சகோதரியை ( லேவி 18:18)
7. சிந்திகிடக்கிறதை ( லேவி 19:9)
8. நியாய விசாரணையில் ( லேவி 19:15)
9. பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ( லேவி 25:34)
10. தோல், மாமிசம் முழுவதும், தலை, தொடைகள், குடல்கள், சாணி, காளை முழவதும். ( லேவி 4:11,12)
11. நஷ்டத்தோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாக ( லேவி 5:6)
12. பழுதற்ற ஒரு ஆட்டுகடாவை ( லேவி 5:18)
13. புளித்தமாவுள்ளதாக ( லேவி 6:17)
14. பாவ நிவாரண பலி ( லேவி 6:28)
15. அசைவாட்டும் மார்கண்டம் ஏறெடுத்துப் படைக்கும் முன்னந்தொடை ( லேவி 7:34)

## 2024- பிப்ரவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்

SIS. ஜீனா சதீஸ்குமார்

SIS. பியூலா மெர்சி பால்

SIS. சாந்தி

BRO. எட்வின் சாம் ஞானதுரை

### 3. கிருபையை விலகப் பண்ணமாட்டார்

அவர் சமூகத்தில் வாஞ்சையும், தவனுமாயிருக்கும் போது நம்முடைய சந்ததியின் மேல் கிருபையை விலகச் செய்யாத உன்னத தேவன் நம்முடைய தேவன். 1-நாளா 17:13-ல் சொல்லுகிறார் என்னுடைய கிருபையை விலகப்பண்ண மாட்டேன் என்று. இது எத்தனை பெரிய பாக்கியம்.

### 4. மகா மேன்மையின் மனுஷன்

1-நாளா-17:17 என்னை மகா மேன்மையான சந்ததியின் மனுஷனாக பார்த்தீர் என்று தாவீது சொல்லுகிறான். ஏனென்றால் தான் என்ற நிலையில் இருந்து வந்தேன் என்று தன்னுடைய பழைய ஏழ்மையான மேய்ப்பனாக வாழ்ந்த வாழ்க்கையை நினைவு கூறுகிறான். அதனால்தான் 1-நாளா-17:16-ல் தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம் என்று சொல்லுகிறான்.

பிரியமானவர்களே, நாமும் நம்மை தேவன் எந்த நிலையாக இருந்து உயர்த்தினார் என்று தாவீதை போல நினைத்து நன்றி கூற வேண்டும்.

### 5. வீடு ஆசீர்வதிக்கப்படும்

1-நாளா 17:27 இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். கர்த்தராகிய தேவரீர் அதை ஆசீர்வதித்தபடியினால் அது என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்ற வார்த்தையின்படி தேவன் நம்மையும், நம்முடைய வீட்டையும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி

## நீரே எல்லாம் நீரே

கண்ணீர் சிந்திய காலங்களும்
கவலை கொண்ட இரவுகளும்
கலங்கி நின்ற பொழுதுகளும்
ஏளனம் செய்த மனிதர்களும்
ஏமாற்றம் தந்த உறவுகளும்
ஏராளம் ஏராளம்...

ஏராளமானோர் இருந்தார்கள்
ஏனோ தூரமாகவே இருந்தார்கள்
நண்பர்களுக்கு பஞ்சமில்லை
ஏனோ நம்பிக்கை தர யாருமில்லை

நாளைய வாழ்வு என்னவாகுமோ
என நினைத்த போதும்
வாழ்ந்தது போதும் என
நினைத்த போதும்
வாழ்வை முடித்திட விரைந்த போதும்

விடியலின் நம்பிக்கை தந்து
விட்டு விடாமல் கூடவே இருந்து
என்னை தூக்கி நிறுத்தியது
என் இயேசு ஒருவரே...

உங்கள் அன்பு சகோதரன்
ஆண்டனி

# வாலிபர் பகுதி

## உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே, இந்த தேவ செய்தியின் மூலம் பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இடைபடுவாராக. ஆமென்.

ஆதியாகமம் புத்தகத்தில் நாம் வாசிக்கிறோம் கடவுள் எவ்வளவு அழகாய் நேர்த்தியாய் ஒவ்வொன்றாய் உருவாக்கினார் என்று. பின்பு பிதாவாகிய தேவன் ஆணும் பெண்ணுமாய் ஆதாமையும், ஏவாளையும் உருவாக்கினார்.

விசேஷமாய் ஆதாமை மண்ணை பிசைந்து தம்முடைய சுவாசத்தை ஊதினார். பின்பு அவனிலிருந்து ஏவாளை உருவாக்கினார். இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் தேவன் அவருடைய சித்தத்தின்படி அவருடைய விருப்பத்தின்படி மிகவும் சந்தோஷமாய் சகலத்தையும் உண்டாக்கினார். எந்த அளவிற்கு ஆண்டவர் சந்தோஷப்பட்டார் என்றால் ஆதி–1:33–ல் அப்போது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது.

ஆதி மனிதர்களான ஆதாமுக்கும், ஏவாளுக்கும் தேவன் தம்மைப் போல சிந்திக்கவும், செயல்படவும் கூடிய சுதந்திரம் கொடுத்திருந்தார். அதினோடே கூட கீழ்ப்படிய வேண்டுமென்று கட்டளையும் கொடுத்திருந்தார். ஆதி–1:26–ல் பின்பு தேவன் நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் உண்டாக்குவோமாக. தேவன் உண்டாக்கின சகல ஆசீர்வாதங்களையும் அவர்கள் சுதந்தரித்தார்கள்.

ஒரு நாள் வந்தது பிசாசு சொன்ன ஒரே ஒரு ஆசை வார்த்தையின் நிமித்தம் ஏவாளும் ஆதாமும் கீழ்ப்படியாமல் விழுந்து போனார்கள். வசனம் சொல்கிறது. 1–யோவா–2:17 உலகமும் அதின இச்சையும் ஒழிந்து போம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

### உலகம் சிநேகம் கொண்ட சிம்சோன்...

சிம்சோனை பற்றி கர்த்தர் சொன்ன வார்த்தை நியாதி–13:5–ல் நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய். அவன் தலையின் மேல் சவரன் கத்தி படலாகாது. அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான். அவன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க தொடங்குவான் என்றார்.

தேவ ஆவியை பெற்ற சிம்சோன் தான் கண்களால் கண்டதை இச்சித்து அதை சாப்பிட்டான். நியாதி–14:8 இதோ சிங்கத்தின் உடலுக்குள்ளே தேன் கூட்டமும், தேனும் இருந்தது. நியாதி–14:9 அவன் அதை தன் கைகளில் எடுத்து சாப்பிட்டுக்கொண்டே நடந்து தன் தாய் தகப்பனிடத்தில் வந்து அவர்களுக்கும் கொடுத்தான். நியாதி–16:1 அவன் வேசியைக் கண்டு அவளிடத்தில் போனான்.

இறுதியாக உலகப்பிரகாரமான சிநேகத்தால் சிம்சோன் தேவன் தனக்கருளிய பலத்தை இழந்தான் நாம் பார்க்கின்றோம்.

நியாதி–16:17 தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி சவரன் கத்தி என் தலையின் மேல் படவில்லை. நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்தது முதல்

 தேவனுக்கென்று நசரேயனானவன். என் தலை சிரைக்கப்பட்டால் என் பலம் என்னை விட்டுப் போகும். வசனம் சொல்கிறது யாக்-1:15 பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்பொழுது மரணத்தை பிறப்பிக்கும்.

## உலகத்தை ஜெயித்த இயேசு கிறிஸ்து..

இயேசு கிறிஸ்து நாற்பது நாள் வனாந்திரத்தில் உபவாசத்தோடு தனித்திருந்த போது அவர் பிசாசினால் சோதிக்கப்பட்டார். உலக இச்சைகளை பிசாசு அவருக்கு காண்பித்தான். அவைகளை சத்திய வசனத்தினால் மேற்கொண்டார். மத்-4:2 அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசம் இருந்த பின்பு அவருக்கு பசியுண்டாயிற்று.

ஜனங்கள் அவரைப்பிடித்து ராஜாவாக்க மனதாயிருந்தார்கள். ஆனால் அவர் அங்கிருந்து விலகி போய்விட்டார். யோவா-6:15 ஆதலால் அவர்கள் வந்து தம்மை ராஜாவாக்கும்படி பிடித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்கள் என்று இயேசு அறிந்து மறுபடியும் விலகி தனியே மலையின் மேல் ஏறினார். பின்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீஷர்களிடத்தில் தன் மரணத்தைக்குறித்து சொன்னார் அப்பொழுது பேதுரு அவரை கடிந்து கொண்டான். மர்-16:22 அப்பொழுது பேதுரு அவரை தனியே அழைத்து கொண்டு போய் ஆண்டவரே இது உமக்கு நேரிடக்கூடாது. இது உமக்கு சம்பவிப்பது இல்லை அவரை கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான காரியத்துக்கு இச்சித்து போகாமல் அவைகளை அவர் ஜெயித்தார். யாக்கோபு பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு சபைகளுக்கு சொல்லும் காரியம் என்னவென்றால் யாக்-4:4 விபச்சாரரே, விபச்சாரிகளே உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்திற்கு சிநேகிதனாய் இருக்க விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாய் இருக்கிறான்.

ஏன் தேவன் இப்படிப்பட்ட கடினமான வார்தைகளை பயன்படுத்துகின்றார் என்ற கேள்வி நமக்குள் வரலாம். தேவனுக்கு பிரியமானவர்களே ஏன் தெரியுமா? அவர் அந்த அளவிற்கு நம்மை சிநேகிக்கிறார் அதனால்தான்.

தேவன் சொல்லுகிறார் மத்-6:24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது.

அன்பான தேவப்பிள்ளைகளே, நாம் எப்படி இருக்கின்றோம் ஆதாம், ஏவாள் மற்றும் சிம்சோன் இவர்களைப் போல் உலகத்திற்கு இசைந்து தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகிறோமோ? இல்லை நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் போல உலக இச்சைகளை ஜெயிக்கிறவர்களாக இருக்கின்றோமா? நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

இயேசுவைப் போல உலகத்தை ஜெயிக்க என்னை நான் அர்ப்பணிக்கின்றேன். நீங்களும் அர்ப்பணிப்பீர்கள் என்று தேவனுக்குள் நான் விசுவாசிக்கின்றேன். ஆமென்.

**அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.**


# Kids Corner




Juan



Dion



Darren



Sifenshika

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில


















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.T.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

He is Risen

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only